Faculty of Islamic Studies & Arabic Language
South Eastern University of Sri Lanka

# Proceedings of the First International Symposium - 2014

On

"TOWARDS THE INTEGRATION OF ISLAMIC KNOWLEDGE WITH HUMAN SCIENCES

PUBLISHED BY

FACULTY OF ISLAMIC STUDIES & ARABIC LANGUAGE
SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA
UNIVERSITY PARK
OLUVIL 32360
SRI LANKA

**Faculty of Islamic Studies & Arabic Language (FIA)**
**South Eastern University of Sri Lanka (SEUSL)**
**University Park**
**Oluvil, 32360**

**Phone: - +94672255127**
**Fax : - +94672255127**

www.seu.ac.lk/fia

**ISBN: - 978-955-627-047-1**

## Copyright:-

**© Faculty of Islamic Studies & Arabic Language, South Eastern University of Sri Lanka**

**Disclaimer:-**

*All rights reserved. No part of this proceedings may be reproduced or transmitted in any form or by any means, electronic or mechanical, including photocopying, recording or by any information storage and retrieval system, without written permission from the authors, except for the inclusion of brief quotations in a review. The material in this publication has been supplied by the authors, and only minor copy editing, if relevant, has been done by the FIA, SEUSL. The views expressed remind the responsibility of the named authors and do not necessarily reflect those of the FIA, SEUSL.*

**Compiled By:-**

Mr. MHA. Munas
Dr. MIM. Jazeel

**Editorial Board:-**

Mr. ABM. Aliyar
Mr. MHA. Munas
Dr. MIM. Jazeel
Mr. AM. Razik
Mr. FHA. Shibly
Mr. HMA. Hilmy
Mrs. Rifa Mahroof

**Page Settings:-**

Mr. SI. Nimisth
Mr. MIM. Irfan

05th January 2014

**Printed By:-**

Newrichoffset Printers, Akkaraippattu

# A socio- cultural perspective of the Muslims of Nainativu in the social Organization of Jaffna

## யாழ்ப்பாணச் சமூகக் கட்டமைவில் நயினாதீவு முஸ்லிம் மக்கள் - ஒரு சமூக வரலாற்றுப்பார்வை

**கலாநிதி க. அருந்தவராஜா,**

சிரேஸ்டவிரிவுரையாளர், வரலாற்றுத்துறை, யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்,
Email: arunn.msu@gmail.com

### ஆய்வின் அறிமுகம்

பல்லினச் சமூகத்தவர்கள் வாழ்ந்து வருகின்ற யாழ்ப்பாண மாவட்டத்தில் முஸ்லிம் மக்களுக் கென அச்சமூகத்தில் தனியான சிறப்பும் அவர்களுக்கென அப்பகுதி யில் நீண்டதொரு வரலாற்றுப் பாரம் பரியமும் உண்டென்பது மறுப்பதற் கில்லை. யாழ்ப்பாண மாவட்டத்தில் முஸ்லிம் மக்களது வருகை பற்றியும் அவர்களது ஆரம்பகாலக் குடியேற்ற ங்கள் தொடர்பாகவும் வரலாற்றா சிரியர்களிடமும் ஆர்வலர்களிடமும் பலதரப்பட்ட கருத்து முரண்பாடுகள் காணப்படுகின்றபோதிலும் இக்கரு த்துக்கள் அனைத்தும் யாழ்ப் பாண த்தில் வாழ்ந்து வருகின்ற முஸ்லிம் மக்களின் முக்கியத் துவத்தினை அதிகரிக்கின்ற வகையிலேதான் அமைந்து காணப்படுகின்றன. பிற்பட்ட சந்ததியினர் களுக்கு தங்களது வரலாற்றினைத் தெளிவாக அறிந்துகொள்வதற்கு எந்தவிதமான உறுதியான சான்றுகளையும் அராபியர்கள் விட்டுச்செல்லாத நிலையில் வெறுமனே இவர்களது ஆரம்பகால வரலாறு பெருமள வுக்குக் கர்ணபரம்பரைக்கதைக ளையே சான்றுகளாகக் கொ ண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (*பத்மநாதன். சி., 2011*)

பொதுவாக கி.பி 7ஆம் நூற்றாண்டில் இஸ்லாத்தின் தோற் றத்தின் பின்னதாகவே இஸ்லாமி யர்களுக்கும் இலங்கைக் குமிடை யிலான தொடர்புகள் ஏற்பட்டன என்ற கருத்துக்கள் பரவலாகக் காணப்பட்டாலும் அராபியர்களுக்கும் இலங்கைக்கு மிடையிலான தொட ர்பானது இக்காலத்திற்கு முற்பட்ட தென்பதனையும் முற்றாக மறுத்துவிட முடியாது. இருப்பினும் அராபி யர்களது ஆரம்பகாலக் குடியேற் றங்கள் இலங்கையில் எங்கு எக் காலப்பகுதியில் ஏற்பட்டதென்பது சர்ச்சைக்குரியதாகவே இன்றுவரை இருந்து வருகின்றது. சிலர் தென் பகுதியில் இவை முதலில் ஏற்பட்ட தாகவும் அப்துல்ரஹீம் போன்ற வர்கள் முஸ்லிம் மக்கள் பேசுகின்ற மொழியினையும் அவர்களது பண்பா ட்டினையும் அடிப்படையாக வைத்து யாழ்ப்பாணத்தில்தான் அராபியர் களின் ஆரம்பகாலக் குடியேற்றங்கள் ஏற்பட்டிருக்க வேண்டுமெனக் குறிப்பி டுகின்றனர். (*அப்துல்ரஹீம் எம்.எஸ்., 1971*). எது எவ்வாறாயினும் அராபி யர்களுக்கும் இலங்கைக்கும் இடை யிலான தொடர்புகள் காலத்திற்கு முற்பட்டதாகக் கொண்டாலும் அவர் கள் நிரந்தரமாகக் குடியேறி இலங்கையில் வாழத்தொடங்கியமை பிற்பட்ட காலமே. அதுவும் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் இவர்களது நிலை யான குடியேற்றங்கள் யாழ்ப்பாணத் தரசர்களது காலப்பகுதியில் அதாவது 13ஆம் நூற்றாண்டின் பின்னதாக இவர்களது ஆரம்பகாலக் குடியேற்ற ங்கள் நல்லூரினை அண்டிய பகுதிகளில் ஏற்பட்டதனை சமகால மற்றும் பிற்பட்ட காலச் சான்றுகள் நிரூபிக்கின்றன.

இவ்வாறு யாழ்ப்பாணக் குடாநாட்டில் யாழ்ப்பாணத்து அரசர் களது காலந்தொடக்கம் குடியேறிச் செல்வாக்குடன் யாழ்ப்பாணத் தமிழ் மக்களுடன் இணைந்த வகையில் பல நூற்றாண்டுகளாக வாழ்ந்து வந்த முஸ்லிம் மக்கள் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையின் காரணமாக 1990இன் பின்பாக யாழ்ப்பாணக் குடாநாட்டினைவிட்டு இலங்கையின் பிறபகுதிகளுக்கு இடம்பெயர வேண்டிய சூழ் நிலைக்குத் தள்ளப்பட்டனர். இதனால் பல்வேறு சொல்ல முடியாத துன்பங்களையும் அவர்கள் அனு பவிக்க வேண்டியவர்களானார்கள். இருப்பினும் அவ்வாறு சென்ற அவர்கள் தாம் சென்ற பகுதிகளின் சூழ்நிலைக்கு ஏற்ற வகையில் தங்களது சமூக, பொருளதார பண்பாட்டு அரசியல் நடவடி க்கைகளில் ஈடுபட்டுக் கொண்டனர். அங்கே பல்வேறு புதிய தொழில்களைப் பழகிக்கொண்டனர். வெளியுலகத்துடனான அவர்களது தொடர்புகளும் அதிகரித்தன. கல்வி நிலையில் முன்பிருந்ததனைவிடவும் உயர்வான நிலையினை யாழ்ப்பாண முஸ்லிம் மக்கள் அடைந்துள்ளனர். எத்தகைய மாற்றங்களை அவர்கள் சந்தித்தபோதும் தாங்கள் பிறந்து வளர்ந்த ஆரம்பகால வாழ்விட த்தினையும் தாங்கள் தமிழ் நண்பர்களையும் அவர்கள் நிரந்த ரமாக மறந்துவிடவில்லை. மீளவும் நாட்டில் ஏற்பட்ட சுமூகநிலமையின் காரணமாக இன்று அவர்கள் தாங்கள் வாழ்ந்த பகுதியினை நோக்கிப் படிப்படியாக மீளக்குடியேறி வருகின்றனர்

யாழ்ப்பாணக் குடாநாட்டின் தென்மேற்கே அமைந்துள்ள தீவுக் கூட்டங்கள் வரலாற்றுக்காலம் முத லாகவே சமூக, பொருளாதார பண் பாட்டின் அடிப்படையில் சிறப்பிட த்தினைப் பெற்றுள்ளதனை வரலா ற்றுச் சான்றுகள் மூலமாக அறி யலாம். இத்தகைய சப்தத் தீவுகளி லொன்றான நயினாதீவுப் பிரதேச த்தினைப்பற்றி வரலாற்று ஆவண ங்களிலும் இலக்கியங்களிலும் சிறப்பித்துக் கூறப்படுகின்றன. இந்து க்களே அதிகளவில் வாழ்ந்து வருகின்ற இப்பகுதியில் தொகையில் குறைந்தளவில் வாழ்ந்து வருகின்ற முஸ்லிம் மக்கள் தங்களுக்கேயுரிய தனித்துவமான பண்பாட்டு அடையா ளங்களை அங்கு பேணிவந்தா லும்கூட இலங்கையின் வேறு பகுதிகளில்

வாழ்ந்து வருகின்ற முஸ்லிம் மக்களிடமிருந்தும் வேறு பட்ட பண்பியல்புகளை உள்வாங்கி யவர்களாக அப்பிர தேசத்தில் வாழ்கின்ற இவர்கள் மீனவத் தொழிலினைப் பிரதான தொழிலாகக் கொண்டு இன்று யாழ்ப்பாணச் சமூகக் கட்டமைவில் பிரதான இடத்தினை வகித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## ஆய்வின் நோக்கங்கள்

முஸ்லிம் மக்கள் பிற சமூகத்தவர்களுடன் இணைந்து கொள்ள முடியாத வகையில் தங்க ளுக்கெனத் தனித்துவமான அடை யாளங்களைப் பேணி வருபவர்கள். இருப்பினும் மொழி அடிப்படையில் தமிழ் பேசுகின்ற பிரிவினர்களான இவர்கள் யாழ்ப்பாணக் குடாநாட்டில் தமிழ்ச் சமுதாயத்துடன் இணைந்த வகையிலேதான் சமூக பொருளாதார வணிக நடவடிக்கைகளை மேற் கொண்டு வருகின்றனர். இவ்ஆய்வின் பிரதான நோக்கமானது யாழ்ப்பாண மாவட்டத்தில் காணப்படுகின்ற நயி னாதீவுப் பிரதேசத்தில் நீண்ட கால மாக வாழ்ந்து வருகின்ற இஸ்லாமிய மக்கள் நாட்டின் பிற பகுதிகளில் வாழ்ந்து வருகின்ற இஸ்லாமிய மக்களது தனித்துவமான பண்பாட்டு அடையாளங்களிலிருந்து எவ்வெவ் வழிகளில் வேறுபடுகின்றனர் என்பத னையும் அத்தீவில் வாழ்ந்து வரு கின்ற தமிழ்மக்களுடனான இவர் களது நீண்டகால உறவின் தன்மை களையும் வெளிப்படுத்தி அவற் றினை ஆவணப்படுத்துவதாக அமை ந்துள்ளது. அத்துடன் இத்தலைப் பின்கீழ் இதுவரை எவரும் ஆக்க ங்களையோ அல்லது ஆய்வுக் கட்டுரைகளையோ சமர்ப்பிக்கவில் லை என்பதும் குறிப்பிட த்தக்கது. இத்தகைய குறைபாட்டினை அகற்று கின்ற நோக்கங் கொண்ட தாகவும் இவ்ஆய்வு அமையுமென்பது எனது நம்பிக்கை.

## ஆய்வு முறையியல்

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள நயினாதீவுப் பிரதேசத்தில் வாழ்ந்து வருகின்ற முஸ்லிம் மக்களைப் பற்றிய ஆய்வாக மட்டுமே அமை கின்ற இவ்ஆய்வின் அணுகு முறை யானது சமூக மற்றும் வரலாற்று அடிப்படையில் அமைந்துள்ளது. அதாவது இவ்வாய்வுக் கட்டுரையில் முதல்தர மற்றும் இரண்டாந்தரச் சான்றுகள் வரலாற்றுச், சமூக அணுகுமுறையின் அடிப்படையில் பயன்படுத்தப்பட்டுள்ளன. ஆய்வின் முதல்தர சான்றுகளாக எனது இவ்ஆய்வுடன் தொடர்புபட்டவர்கள் பலருடன் மேற்கொண்ட நேர்கா ணல்கள், குறிப்பாக மூத்த இஸ் லாமிய அறிஞர்கள், கல்விமான்கள், வர்த்தகர்கள் யாழ்ப்பாணக் குடா நாட்டில் ஆரம்பத்தில் குடியேறிப் பின்னர் மீளக்குடியேறாமல் பிற பகுதிகளில் வாழ்கின்ற முஸ்லிம் மக்கள் மீளக்குடியேறி வருபவர்கள், நயினாதீவில் வாழ்ந்து வருகின்ற முஸ்லிம் மக்கள், அப்பகுதியில் வாழ்ந்து வருகின்ற தமிழ்மக்கள் போன்ற பலருடனும் சந்தித்துப் பல தரவுகள் பெறப்பட்டு இவ்வாய்வுக் கட்டுரை நிறைவு செய்யப்பட்டுள்ளது. அந்தவகையில் நேர்காணலுடன் அவதானம் மற்றும் கலந்துரையாடல் போன்றனவும் முதல்தரச்சான்றுகளாக ஆய்வில் பயன்படுத்தப்பட்டுள்ளன. பிற்பட்ட காலங்களில் முதல்தர சான்றுகளை அடிப்படையாகக் கொ ண்டு எழுதப்பட்ட இலக்கியங்கள், கட்டுரைகள் என்பனவும் குறைந் தளவில் ஆய்வுக்காக இரண்டாந்தரச் சான்றுகளாகக் கையாளப்பட்டுள்ளன.

## கடந்தகால இலக்கிய மீளாய்வு

பொதுவாக இலங்கையில் முஸ்லிம்கள் தொடர்பாக படைப் புக்கள் வெளிவந்தாலும் யாழ்ப்பா ணத்தில் வாழ்ந்த முஸ்லிம் மக்கள் பற்றியதாக ஓரிருவரே நூல்களை எழுதியுள்ளனர். அதிலும் குறிப்பாக நயினாதீவில் வாழ்கின்ற முஸ்லிம் மக்கள் பற்றி எவரும் தனித்து ஆராய்ச்சி அடிப்படையில் ஆராய வில்லையென்றே கூறவேண்டும். எம்எஸ்.அப்துல்ரஹீம் எழுதிய யாழ்ப் பாண முஸ்லிம்களின் வரலாறும் பண்பாடும்(1971), செ. இராசநாயகம் எழுதிய *யாழ்ப்பாணச்சரித்திரம்* (மீள்பதிப்பு)(1999),க.அருந்தவராஜாவின் யாழ்ப்பாண முஸ்லிம்கள்(2012), மயில்வாகனப்புலவரின் யாழ்ப்பாண வைபவமாலை போன்றன ஓரளவிற்கு இவ்வாய்வுடன் தொடர்பாக மேற் கொள்ளப்பட்ட கடந்தகால ஆய்வு களாகக் குறிப்பிடலாம்.

## சுருக்கமும் முடிவும்

யாழ்ப்பாண மாவட்டத்தில் அமைந்துள்ள நயினாதீவுப் பிரதே சத்தில் நீண்டகாலமாக வாழ்ந்து வருகின்ற முஸ்லிம் மக்கள் இலங்கையின் பிற பகுதிகளில் வாழ்ந்து வருகின்ற முஸ்லிம் மக்களிலிருந்து வேறுபட்ட மற்றும் பிரித்துப் பார்க்கக்கூடிய இயல்புகள் கொண்டவர்களாகக் காணப் படுகின்றனர். இவர்கள் எப்பகுதிக்குச் சென்றாலும் அவர்களது நடை, பேச்சுவழக்கு போன்ற பண்புகள் அவர்களை இனங்காட்டிக் கொடுத்து விடும். யாழ்ப்பாணத்தின் பிற பகுதி களில் இவர்களது வரலாறு பல நூற்றாண்டுகளைக் கடந்தபோதும் நயினாதீவில் இவர்களது வரலாற்றின் தொடக்கம் வெறும் 200ஆண்டு களுக்கு உட்பட்டதாகவே அமைந்து ள்ளது. அதுமட்டுமன்றி இங்கு வாழ்ந்து வருகின்ற முஸ்லிம்கள் சகலரும் கேரள வழிவந்தவர் களாகவே காணப்படுகின்றனர். ஒரே குடும்ப உறவுகளைக் கொண்டவர் களாக வாழ்ந்து வருகின்ற இவர்களிடம் ஏனைய முஸ்லிம் கலப் புக்கள் இடம்பெறவில்லை. இவர்க ளுக்கும் அங்கு வாழ்ந்து வருகின்ற தமிழ் மக்கள் சிலருக்கும் இரத்த உறவு காணப்படுகின்றது. முத்துக் குளித்தலை நோக்கமாகக் கொண்டு வந்த இஸ்லாமியரொருவர் தான் வந்த கப்பல் கடலில் மூழ்கியதன் காரணமாக நீந்தி உயர்தப்பி நயினாதீக்கரையில் ஒதுங்கியதாகவும் அவரைக் குணப்படுத்தியதுடன் இங்கு ள்ளவர்கள் அவருக்குப் பொன்னி என்ற தமிழ் பெண்ணைத் திருமணம் செய்துகொடுத்ததன் வாயிலாக இவர்களது சனவிரிவாக்கம் அங்கு ஏற்பட்டதனை வரலாறு கூறுகின்றது. இதனால் இன்றும் தமிழ்மக்களை அவர்கள் அண்ணன், பெரியப்பா, சித்தப்பா போன்ற உறவுகளைச் சொல்லி அழைத்து வருகின்றனர். மேலும் நாட்டின் பல பகுதிகளில் தமிழ் சமூகத்துடன் திருமண உறவினைப் பேணிவந்த இவர்கள் நயினாதீவில் இத்தகைய உறவு முறையினைக் கைக்கொள்ள முடிய வில்லை. அதுமட்டுமன்றி இவர்கள் ஒரே குடும்ப உறுப்பினர்களாக இருப்பதால் அவர்கள் திருமணத் திற்காக பிற இடங்களையே நாடிச் செல்கின்றனர்.

அங்குள்ள இஸ்லாமிய மக்கள் எல்லோருமே மீனவத் தொழிலைச் செய்கின்றனர். இப்படி ஒரே கிராமத்தில் சகலரும் ஒரே தொழிலை மேற்கொள்வதனைப் பார் க்க

முடியாது. எல்லாவற்றுக்கும் மேலாக 1990களின் பிற்பகுதியில் யாழ்ப்பாணத்தில் இஸ்லாமியர்கள் இடம்பெயர்ந்த சமயத்தில் ஒரு முஸ் லிமாவது அங்கிருந்து இடம்பெயர வில்லையென்பது பலருக்குத் தெரி யாததொன்று. யாழ்ப்பாணத்தில் இஸ்லாமியர்களது நடமாட்டம் இல் லாத அக்காலப்பகுதியில் எங்கோ ஒரு மூலையில் யாழ்ப்பாண த்திற்குட்பட்ட பிரதேசமான நயினா தீவில் பள்ளியில் 5 வேளையும் வாங்குச் சத்தம் கேட்டவண்ணமே இருந்தது. பொதுவாக முஸ்லிம் மக்கள் வாழ்கின்ற வீடுகள் அடுத்த டுத்து அமைந்து அவை முஸ்லிம் மக்கள் வாழ்கின்ற பகுதிக ளாகவே காணப்படும். ஆனால் நயினாதீவில் தமிழ் - முஸ்லிம் மக்களது வீடுகள் மாறி மாறி அமைந்து காணப் படுகின்றன. அவர்களது பேச்சு, ஒலி எழுப்புகின்ற முறைகள் யாழ்ப் பாணத்தின் பிறபகுதிகளில் வாழ்கி ன்ற முஸ்லிம் மக்களது பேச்சு வழக்கிலிருந்தும் வேறுபட்டுள்ளது. இப்பிரதேசத்தில் காணப்படுகின்ற பள்ளிவாசலானது அக்காலப் பகுதியில் கேரளாவிலிருந்து கொண் டுவரப்பட்ட பொருட்களால் அமைக்க ப்பட்டு உருக்குலையாமல் இன்று வரை காணப்படுகின்றது. யாழ்ப்பாண த்தின் பிற பகுதிகளில் பள்ளி வாசல்கள் போரினால் சிதைவடைந்த நிலையில் இப்பள்ளி அக்காலப் பொலிவுடன் இன்றும் அசையாமல் உள்ளது. குறைந்தளவான முஸ்லிம் மக்கள் வாழ்கின்ற இத்தீவில் பள்ளியின் மௌலவிக்கு 500 ருபாவு க்கு மேல் கொடுத்து இப்பள்ளியி னைப் பராமரித்து வருவது நோக்க த்தக்கது. கல்வியில் பெரிதளவில் இவர்கள் அக்கறைகாட்டவில்லை. இவர்களுக்கெனத் தனியான பாடசாலைகளும் இங்கில்லை.

இவையெல்லாம். நயினாதீவுப் பகுதியில் வாழ்கின்ற இஸ்லாமிய மக்களைப் பிறபகுதிகளில் வாழ்கின்ற இஸ்லாமிய மக்களிலிருந்து வேறுபடு த்திக் காட்டுகின்ற அம்சங்களாகும். பொதுப்பட ஆய்வின் முடிவுகள் நயினாதீவு முஸ்லிம் மக்களை யாழ்ப்பாண மாவட்டத்தின் அல்லது இலங்கையின் பிறபகுதிகளில் வாழ் கின்ற இஸ்லாமிய மக்களின் தனித்துவப் பண்பாட்டு அடையாளங் களிலிருந்தும் வேறுபடுத்திக் காட்டு கின்ற வகையில் அமைந்து காணப்படுகின்றன. இத்தகைய பண்புகளெல்லாம் ஒருங்கு சேர்ந்த வகையில் பிறபகுதிகளில் வாழ்கின்ற முஸ்லிம் மக்களிடம் காணப்படு வதில்லையென்பது அவதானிக்கத் தக்கது.

## உசாத்துணைகள்


1. Arasaratnam,S., 1958: *Dutch power in Ceylon 1658 – 1670*. Netherland.

2. Rasanayagam,C., 1926: *Ancient Jaffna*, Madras.

3. அருந்தவராஜா. க., 2012: *யாழ்ப்பாண முஸ்லிம்கள்*. நல்லூர்.

4. அப்துல்ரஹீம், எம். எஸ்., 1971: *யாழ்ப்பாண முஸ்லிம்களின் வரலாறும் பண்பாடும்*. யாழ்ப்பாணம்.

5. இராசநாயகம்.செ., 1999: *யாழ்ப்பாணச்சரித்திரம்*. சென்னை.

6. சிற்றம்பலம், சி.க., 1993:*யாழ்ப்பாணத்தின் தொன்மை வரலாறு*, யாழ்ப்பாணம்.

7. பத்மநாதன், சி., 2001: *இலங்கைத் தமிழர் தேசவழமைகளும் சமூகவழமைகளும்*, கொழும்பு.